பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரசோற்பத்தி ஹு வைகாசி ௴ 26 உ ஞாயிற்றுக்கிழமை (09-06-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் :187

# பிரெஞ்சு வைத்திய குழுவினர் அனைவரும் பாரிஸ் பயணம்!

## அங்கு வைத்தே இறுதி முடிவு செய்யப்படும்

கொழும்பு ஜூன் 9

வடக்கு—கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் பணியாற்றிய பிரெஞ்சு வைத்தியக் குழு (எம். எஸ். எவ்) டாக்டர்கள் எல்லோரும் நேற்று முன்தினம் பாரிஸுக்குப் பயணமானார்கள்.

வடக்கு—கிழக்குப் பகுதியில் தொடர்ந்து பணி செய்வதா அல்லது நிறுத்துவதா என்பதைத் தமது தலைமையக அதிகாரிகளுடன் கலந்து பேசி முடிவு செய்வதற்காகவே அவர்கள் சென்றுள்ளனர் என்று கூறப்படுகிறது.

பிரெஞ்சு வைத்தியக்குழுவினர் மீது தாண்டிக்குளத்தில் வைத்து விமானத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது குறித்து ஜனாதிபதி நியமித்த தனிநபர் ஆணைக்குழுவின் அறிக்கையின் பிரதியையும் எடுத்துக்கொண்டே அவர்கள் பாரிஸ் சென்றுள்ளனர். தனிநபர் விசாரணை ஆணைக்குழு தனது அறிக்கையை

[4 ஆம் பக்கம் பார்க்க]

## முந்திரிகைக்குளத்தில் காவல் அரண் தகர்ப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 9

மன்னாரில் உள்ள முந்திரிகைக்குளம் முகாமுக்கும், இலோன் தியேட்டர் முகாமுக்கும் இடையில் உள்ள ஸ்ரீலங்கா இராணுவத்தின் காவலரண் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை 12.15 மணியளவில் அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தினர். தாக்குதலில் காவல் அரண் அழிக்கப்பட்டது. ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

சுமார் மூன்று நிமிடங்கள் இடம்பெற்ற இந்த தாக்குதலால் காவல் அரணிலிருந்த சிப்பாய்கள் காயங்களுடன் அருகில் உள்ள முகாம்களுக்குள் ஓடினார்கள்.

காவலரணைக் கைப்பற்றிய புலிகள் அதனை முற்றாகத் தகர்த்து, ஆயுதங்களைக்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## மன்னாரில் வெளியேறிய படை முகாமுக்குள் முடக்கப்பட்டது!

யாழ்ப்பாணம், ஜூன் 9

மன்னார் மாவட்டத்தில் காலவரையற்ற ஊரடங்கை அமுல் செய்து, குடியிருப்புப் பகுதிகளை நோக்கி முன்னேறிய படையினரை விடுதலைப் புலிகள் தடுத்து, தாக்கி முகாமுக்கு திருப்பியனுப்பியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நானாட்டான் முகாமில் இருந்து வெளியேறி ஆள்

[4-ஆம் பக்கம் பார்க்க]

## பயணிகள் "பாஸ்" முறை: நாளை முதல் புதிய திட்டம்

வடமாகாணத்திலிருந்து வெளியே செல்வோருக்கு "பாஸ்" வழங்குவது தொடர்பான புதிய திட்டம் நாளை முதல் அமுலுக்கு வரவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்சமயம் அமுலில் உள்ள 'பாஸ்' வழங்கும் நடைமுறை மாற்றியமைக்கப்பட்டு கிராம சேவையாளர்கள் மூலம் பாஸ் வழங்கும் புதிய திட்டமே நாளை முதல் அமுலுக்கு வரவிருக்கிறது.

புதிய திட்டம் தொடர்பான விவரங்கள் நேற்று கிராம சேவையாளர்களுக்கு வழங்கப்பட்டன.

இதேவேளை பழைய நடைமுறையின் கீழ் "பாஸ்" பெற்றவர்கள் அவற்றைப் பாவித்து எதிர் வரும் 20 ஆம் திகதி வரை பயணம் செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

[உ-3]

## மானிப்பாயில் மக்கள் வெள்ளம் முத்தமிழ் விழாவைக் கண்டு களிக்க

— மானிப்பாய் செய்தியாளர்:-வி. பி. சர்மா —

மானிப்பாய், ஜூன் 9

தமிழீழ விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்படும் முத்தமிழ் விழாவின் முதற் கட்ட நிகழ்ச்சிகள் மானிப்பாய் மாவீரர் கலையரங்கில் இறப்பாக நிறைவெய்தியது.

நேற்றுடன் மூன்றாம் நாள் நிகழ்ச்சியில் மானிப்பாய் நகரில் மக்கள் வெள்ளம் அலைமோதியது.

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரின்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## காரைநகர் இளைஞர்கள் படையினரால் தடுத்து வைப்பு

காரைநகரில் சிக்குண்ட இளைஞர்கள் கடற்படையினரின் தடுப்புப் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்று அறியவருகிறது.

இதேவேளை காரைநகரில் உள்ள வீடுகள் பலவும் நாளாந்தம் இடிக்கப்பட்டு வருவதால் அது பொலிவிழந்து விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை காரைநகரில் சிக்கியுள்ள மக்கள் தமது உறவினர்களுக்கு எழுதிய பல கடிதங்கள் செஞ்சிலுவைச் சங்கசர்வதேசக்குழுவின் உதவியுடன் அவர்களுக்குக் கிடைத்தன.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## 3 படையினர் மன்னாரில் பலி!

மன்னார் மாவட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கும் அரசப் படையினருக்கும் இடையே நடந்த மோதல்களில் மூன்று படையினர் கொல்லப்பட்டனர். 9 படையினர் காயமடைந்தனர் என்று கொழும்பில் இராணுவ அதிகாரி ஒருவர் சொன்னார்.

## 2 ஆம் கட்ட முத்தமிழ் விழா: சாவகச்சேரி விழாக்கோலம்!

யாழ்ப்பாணம் ஜூன் 9

விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டிலான முத்தமிழ் விழாவின் இரண்டாம் கட்ட நிகழ்ச்சிகள் சாவகச்சேரியில் இன்று ஆரம்பமாகின்றன.

சாவகச்சேரி சிவன் கோவிலுக்கு அருகில் உள்ள மைதானத்தில் இதற்கென விசேடமாக அமைக்கப்பட்ட மாவீரர் கலை அரங்கில் மாலை 5.30 மணிக்கு விழா ஆரம்பமாகும்.

விழாவை முன்னிட்டு சாவகச்சேரி நகர் முழுவதும் அழகாக அலங்கரிக்கப்பட்டுள்ளது.

சிவப்பு, மஞ்சள் வண்ணக் கொடிகளும் வண்ணச் சரிகைச் சரங்களும், தோரணங்களும் வீதி எங்கும் காணப்படுகின்றன.

சாவகச்சேரி கண்டி வீதி, புகையிரத நிலைய வீதிகள் முழுவதும் இருமருங்கும் ரியூப் பல்புகள் பொருத்தப்பட்டு மின்னொளி அமைப்பு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. ரயில் நிலையச் சந்தியில் பெரிய சிகரம் அமைக்கப்பட்

[4 ஆம் பக்கம் பார்க்க]

### முச்சந்தி முரளி



அப்ப.... தமிழகத்தையும் [illegible] இத்தினம் போலை.....

முத்தமிழ் விழாவில் தமிழீழ தேசிய விருது பெறுவோர் விவரம்

3 ஆம் பக்கத்தில்

## சித்தாண்டியில் 3 சிப்பாய்கள் பலி

கொழும்பு ஜூன் 9

மட்டக்களப்பு மாவட்டம் சித்தாண்டிப் பகுதியில் ஸ்ரீலங்கா படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இடம்பெற்ற சண்டையில் 3 படையினர் உயிரிழந்தனர்; 2 படையினர் காயமடைந்தனர் என்று கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

[உ-ஏ]

## ஆனையிறவில் குண்டு வீச்சு!

யாழ்ப்பாணம், ஜூன் 9

ஆனையிறவு முகாமைச் சூழவுள்ள பகுதிகளில் நேற்றுக் காலை மூன்று பொம்மர்கள் மூன்று தடவைகள் கடும் வான் தாக்குதலை நடத்தின. சேத விவரங்கள் பற்றி தகவல்கள் கிடைக்கவில்லை.

இதே வேளை நேற்று முன்தினம் இரவு ஆனையிறவு முகாமில் இருந்து இயக்கச்சியை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

[உ-3]

## தமிழகத்துக்கு இராணுவம்!

சென்னை, ஜூன் 9

தமிழ்நாடு மாநிலத்தில் பல மாவட்டங்களுக்கு இராணுவப் படைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெறவிருக்கும் சட்டசபை மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்கள் தொடர்பாக இப் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாநிலத் தலைமைச் செயலாளர் டீ. வி. அந்தோனி சொன்னார்.

[உ-ஏ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

எம்மிடம் புதிய, பழைய இனிமாப்பட வீடியோ பிரதிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தி. பரமசிவம் பிள்ளை, மூத்ததம்பிவளவு, கரவெட்டி வடக்கு, கரவெட்டி. [4120]

J. C. இன பசு மாடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சி. சமனநந்தன், "நில்மந்தா" மானிப்பாய். மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு அருகாமையில். [4132]

### உடன் விற்பனைக்கு

ஒரு புதிய பயனீர் [Pioneer] [Ladies] பெண்கள் துவிச்சக்கர வண்டி விற்பனைக்குண்டு ரூ 3500/- க்கு மேல் விற்கப்படும். இ. இராதாகிருஷ்ணன் கலாமன்றத்திற்கு முன்னால் கலாசாலை வீதி, திருநெல்வேலி வடக்கு. [17090]

### கல்வி

ஆண்டு 5 இலிருந்து G.C.E. [O/L] வரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 24 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 20 மணித்தியாலத்திலிருந்து 40 மணித்தியாலத்திற்குள் ஆரம்ப அறிவிலிருந்து விஷேட சித்திக்குக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு, ஒழுங்கை, லோகேந்திராவீதி, சுண்டிக்குளி. [4133]

### மீட்டல் பௌதிகம்

1991 ஆகஸ்ட் மாதம் A/L விஞ்ஞானம் எடுக்கும் மாணவர்கள் மீட்டல் செய்வதற்கு இது ஒரு சிறந்த புத்தகம். சகல புத்தகசாலைகளிலும் பெறலாம். பிரதிக்கு முந்துங்கள் ஆ. கருணாகரர் வைமன் றோட், யாழ்ப்பாணம். [17092]

### தேவை

சோவா, குரக்கன் தேவை. தொடர்பு கொள்ளவும் "அன்னை பாக்". இணுவில். [இ/0043]

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், பீனிசம், தலையிடி, தலைவாலிகள், குஷ்டரோகம், சரும நோய்கள் மற்றும் சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் சி. இராசரத்தினம், 121, 2ஆம் குறுக்கு தெரு, யாழ்ப்பாணம். [4099]

### வைத்திய நிலையம்

வேலணையிலும், புளியங்கூடல் சத்தி சரவணை வீதியிலும் இயங்கி வந்த எமது வைத்திய நிலையம் தற்காலிகமாக கஸ்தூரியார் வீதி, 140 ஆம் [320] இலக்க கட்டடத்தில் இயங்கி வருகின்றது. டாக்டர் கந்தையா நவரத்தினம் 40, நெடுங்குளம் வீதி, கொழும்புத்துறை. [17074]

### பயிற்சி வகுப்புகள்

கேக் ஐசிங், சமாதகலை புதிய பயிற்சி வகுப்புகள் 15 - 6 - 91 சனிக்கிழமை பி. ப. 2-00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன. Yogi Home Science Academy, 71B, நாயன்மார் வீதி, [Off Kachcheri Nallur Road] நல்லூர், யாழ்ப்பாணம். [17073]

### சோதிட மாந்திரீகம்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாக தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள். "சக்தி சரவணா" 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முன்பாக] இரவு பகல் 9-00 மணி தொடக்கம் 3-00 மணி வரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. [4128]

### மீனவர்களுக்கு அடையாள அட்டை

தமிழ்நாடு-புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்களுக்கு விசேட அடையாள அட்டைகளை அரசு அதிகாரிகள் வழங்கி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ - எ]

## அறிவித்தல்

அகில உலக கெயர் உதவித் திட்டத்தின் கீழ் மரவேலை, கட்டுவேலை நிலையப் பயிற்சி முடித்து 1990 ஏப்ரல் மாதம் தொடக்கம் ஜூன் மாதம் வரை கெயர் ஸ்தாபன மேற்பார்வையில் வேலைத்தலப் பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டவர்கள் 14-06-91க்கு முன்னதாக தங்கள் பெயர்களை கெயர் 15, கண்டி வீதி, யாழ்ப்பாணம் அலுவலகத்தில் பதிந்து கொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள்.

ம. பத்திநாதன்,
பிராந்திய பிரதிப் பணிப்பாளர்,
அகில உலக கெயர்,
யாழ்ப்பாணம்.

[17080]

## ராஜீவ் பிரசாரபட்டியலில்:

# கடைசி நேரத்திலேயே ஸ்ரீபெரும்புதூர் சேர்ப்பு

சென்னை, ஜூன் 9

ராஜீவின் தமிழ்நாட்டு பிரசாரபட்டியலில் நாகப்பட்டினம், சேலம், சிவகங்கை, மயிலாடுதுறை, கிருஷ்ணகிரி, பெம்பளூர் ஆகிய இடங்களே இடம்பெற்றிருந்தன. ஸ்ரீபெரும்புதூர் அப்பட்டியலில் இடம் பெற்றிருக்கவில்லை. இறுதிநேரத்தில்தான் ஸ்ரீபெரும்புதூர் சேர்க்கப்பட்டது.

இப்படி திருமதி மரகதம் சந்திரசேகர் சொன்னார்.

குண்டு வெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்து தற்போது அப்போலோ ஆஸ்பத்திரியில் இவர் சிகிச்சை பெற்று வருகிறார். [இ-எ]

## ரயில் விபத்தில் 200க்கும் மேல் பலி

ராவல்பிண்டி, ஜூன் 9

பாகிஸ்தானின் ராவல்பிண்டிக்கு அருகே நேற்று இடம்பெற்ற கோர ரயில் விபத்து ஒன்றில் 200க்கும் அதிகமானோர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

எக்ஸ்பிரஸ் பயணிகள் ரயில் ஒன்று நின்று கொண்டிருந்த சரக்கு ரயில் மீது மோதியபோது இந்த விபத்து ஏற்பட்டது.

காயமடைந்தவர்களின் எண்ணிக்கை நூறைத்தாண்டி விட்டது என்றும் இறந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்றும் கூறப்பட்டது.

விபத்து குறித்து பூரண விசாரணை ஒன்றுக்கு பிரதமர் நவாஸ் ஷெரீப் உத்தரவிட்டிருக்கிறார். [இ-எ]

## ஜெயலலிதா வீட்டுக்கு தீவிர பாதுகாப்பு

சென்னை, ஜூன் 9

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவின் வீட்டுக்கு பொலிஸ் காவல் பலப்படுத்தப்பட்டுள்ளது.

தனது உயிருக்கு பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகக் கூறி தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுவதை ஜெயலலிதா ரத்துச் செய்தது தெரிந்ததே.

# கலைஞர்கள், கவிஞர்கள் தமிழீழம் நிறுவ உதவ வேண்டும்

## புதுவை இரத்தினதுரை அழைப்பு

"புனிதம் நிறைந்த தமிழீழம் ஒன்றை அமைக்க கவிஞர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், அறிஞர்கள், கல்விமான்கள் ஒன்றிணைய வேண்டும் காமை எமக்குத் தந்த காலத்திலேயே தமிழீழம் பெறுவது மட்டுமல்ல; அக்காலத்திலேயே தமிழீழத்தை நிர்மாணிப்போம் என உறுதி கொள்வோம்,"

மானிப்பாய் மாவீரர் கலையரங்கில் ஆரம்பமாகிய முத்தமிழ் விழாவில் உரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டு கழக பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை இவ்வாறு கூறினார்.

திரு. புதுவை இரத்தினதுரை தமது தலைமையுரையில் மேலும் கூறியதாவது:-

இப்படியான முத்தமிழ் விழா ஒன்றை நடத்த வேண்டுமென கலைஞர்கள், எழுத்தாளர்கள், பொதுமக்கள் நீண்ட நாள் ஆவல் கொண்டிருந்தனர். தூங்காத நகரமென பூம்புகார் ஒரு காலத்தில் விளங்கியது போல எமது மண்ணிலும் ஒரு பூம்புகார் தற்போது இடையாவிடினும் மலரப் போகும் தமிழீழத்தில் அது இடைந்தே தீரும்.

இன்றைய முத்தமிழ் விழா எமது தலைவர் திரு. வே. பிரபாகரனின் ஆசைப்படி உருவாக்கப்பட்டது. ஆண்ட தமிழன் பரம்பரை மீண்டும் ஆள வேண்டும் என ஆசைப்படுகிறோம். உலகத்துக்கே ஒரு வழிகாட்டியாக, அமையப் போகும் தமிழீழம் விளங்க வேண்டும்.

எமது பொருளாதாரம், பண்பாடு, வாழ்வு நெறி ஆகியன உலகத்துக்கே ஒரு எடுத்துக் காட்டாக அமைய வேண்டும். பெண்ணடிமை, ஆணாதிக்கம், மூடநம்பிக்கைகள் அழிந்து எமது மரபுகளை பேணி நிற்க வேண்டும்.

இப்படி அவர் கூறினார். [இ-90]

# நினைவஞ்சலி





## நெல்லியடி திருமகள் ஸ்ரோர்ஸ்

| அமரர் | அமரர் |
|---|---|
| மு. வல்லிபுரம் | வ. சிவசோதி |
| (தாபகர்) | (உரிமையாளர்) |
| மண்ணுறவு: 12 - 03 - 1919 | மண்ணுறவு: 18 - 05 - 1943 |
| விண்ணுறவு: 08 - 05 - 1991 | விண்ணுறவு: 13 - 06 - 1989 |

முத்தைதரு பெற்றமகன் வல்லிபுரம் ஆனாலும், ரத்தினமே என்றாரார் தாம் அழைத்த திருமகனே, சின்ன வயது தொட்டு திருமகளின் பார்வையது, உன்னிடத்தே வந்ததனால் உயர்வு பல கண்டீரே. சிவசோதி விற்கலைந்த சிவசோதி தன்னோடு, தவபுஷ்பராணி. இந்திராணியெனும் மூன்று மக்கள், பெற்ற அன்னை தங்கம்மா மண்டான் துயர் பெருக. பெற்றாய் மறுமணமே வேண்டாது வாழ்ந்தாரே, திருமாளின் தாய்களை சிவசோதி அணைந்துவிட. பெருந்துயர்க் காவாளாய்-பின்னோசி நாள் உன்கனவில், ஒரு மோட்டார் வாகனத்தில் வந்தேறி இருந்தானென்று, கேட்டேற்றிப் போனதெனக் கண்ட கதை வரைந்தீர், அந்தவொரு கனவோடு காரான் அடங்கிவிட, நொந்திருந்தீர் சோதி சென்ற பாதைதனை நாடிவீர். எண்ணெண்ணில்லைத்த சுபாஜினி நம் கோபிநாத், இளமழலை பிறந்நாத் இராகவன் உமாலினியும், எழிற்சுவா இனிக்குஞ்சு இராகுலன் பிரதாபன், அன்பு மயூரனுமாய்ப் பேரர் கலங்க விட்டு துன்பச் சுமையோடு சுற்றம் அனைவெல்லாம். சோதிக்காய் அழுதகண்ணீர் முற்றாக வற்றுமுன்னம். ஏதுக்கு இவ்வளவு விரைவாகப் போயினீரா, மைந்தன் பிரிவாலே மதிகலங்கி உயிரிழந்தீர், நொந்தே அழுகின்றோம் உமக்கமைக சாந்தி, அங்கே;

இன்று (9-6-91) காலையில் நடைபெறும், எங்கள் குடும்ப ஒளிவிளக்கு அமரர் மு. வல்லிபுரம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியையிற் கலந்து கொள்வதோடு அன்னாரின் நினைவாக வழங்கும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம்.

திருமகள் சோதி வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

திருமகள் குடும்பம்

[17083]

# ENGLISH ASSISTANT TEACHERS

போட்டிப் பரீட்சைக்கான

## துரித பயிற்சி வகுப்புகள்

ஆரம்பம்: 17 - 06 - 1991

Lectures By KANDIAH NAVARENDRAN

Fees Rs. 150/-

★ விண்ணப்பப் பத்திரத்தையும் விவரக் கொத்தையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 14-06-1991

மேலதிக விபரங்களுக்கு:

## SCHOOL OF BUSINESS ADMINISTRATION

[O. L. R. தேவாலய மேற்குப்பக்கம்]
16, 3 ஆவது குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்

[இ-0097]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பிந்துதல் ஆகாது

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள குளங்களைப் புனரமைப்பதற்கு முயற்சிகள் நடைபெற இருப்பதாகச் செய்தி வெளிவந்துள்ளது. நீர்ப்பாசனத்துக்கு உகந்த குளங்கள், நீரைத் தேக்கி வைக்கக்கூடிய குளங்கள் என்று இரு பிரிவுகளாக வகுத்து புனரமைப்பு வேலைகளைத் தொடங்குவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

குடாநாட்டில் குளம் புனரமைப்பு வேலைகளை எப்போதோ செய்திருக்க வேண்டும். இப்போதாவது செய்யப் போகிறார்களே என்பது பரவாயில்லை. முற்றாகச் செயலிழந்து கைவிட்டுப் போவதைவிட பிந்தியேனும் செய்வது ஓரளவு மேல்.

குடாநாட்டில் பெய்யும் மழை நீரை, அது கடலில் போய்ச்சேர்ந்து வீணாகாமல் தடுத்து, குளங்களில் தேக்கி வைக்க வேண்டும் என்றும் அதன் பொருட்டு இங்குள்ள குளங்களை ஆழமாக்கிப் புனரமைக்க வேண்டும் என்றும் இப்பகுதியில் இதற்கு முன்னரும் பல தடவைகள் வலியுறுத்தி இருந்தோம்.

அரசாங்க நிர்வாகம் இப்போதாவது இவ்விடயத்தில் அக்கறை எடுத்துள்ளது வரவேற்கத்தக்கது. வெறும் எழுத்தில், சொல்லில் மட்டும் அல்லாமல் செயலிலும் அது நிறைவேற்றப்பட வேண்டும்.

குடாநாட்டில் ஆறுகள் இல்லை. எனவே மாரியில் பெய்யும் மழையைத் தேக்கிக் கோடையில் விவசாயத்துக்குப் பயன்படுத்தக் குளங்களே சிறந்த சாதனங்கள். அதனாலேயே எமது முன்னோர்கள் கிராமந்தோறும் குளங்களையும், வயல்வெளிகள் தோறும் கேணிகளையும் தோண்டினார்கள்.

மழை நீரைக் குளங்களில் தேக்குவதால் தண்ணீரைத் தக்கபடி பயன்படுத்தவும், விவசாயத்தைப் பெருக்கி, உற்பத்தியை அதிகரிக்கவும் ஏதுவாகும்; வரட்சியைக் குறைக்கலாம். அது மட்டுமன்றி எங்கள் பிரதேசத் தண்ணீர் உவராவதையும் தடுக்கலாம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பிரதான தொழில்களில் விவசாயமும் ஒன்றாக விளங்குகிறது. அப்படியிருக்க எமது முன்னோர்கள் தூரதிருஷ்டியுடன் தோண்டி வைத்த குளங்களைப் புனரமைத்து, ஆழமாக்கி அவற்றைப் பயன்படுத்த இதுவரை நடவடிக்கை எடுக்கப்படாமை எமது அக்கறையின்மையையும், சோம்பேறித் தனத்தையுமே எடுத்துக் காட்டுகின்றது.

இம்முறையாவது திட்டமிட்டபடி காரியம் நடக்க அதிகாரிகள் உரிய கரிசனையுடன் செயற்பட வேண்டும். மக்களும் இவ்விடயத்தில் நிர்வாகத்தினருக்கு உதவ வேண்டும். குளங்களைப் புனரமைக்கும் பணியை சிரமதானம் மூலம் செய்து ஒத்துழைப்பு நல்கலாம்.

உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் மட்டத்தில் அல்லது கிராமசேவகர்கள் மட்டத்தில் உள்ள சனசமூக நிலையங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள், விவசாய உற்பத்திக் குழுக்கள் என்பன இவ்விடயத்தில் நிர்வாகத்தினருக்கு உந்து சக்தியாக இருந்து தமது பங்களிப்பை நல்க வேண்டும். தமது பகுதியில் உள்ள குளங்களைப் புனரமைக்க உதவ வேண்டும். முயற்சி திருவினையாக்கும். எனவே இவ்விடயத்தை நாளை என்று ஒத்திப் போடாமல் உடனடியாகப் பணியை ஆரம்பிக்க வேண்டும். இனியும் பிந்துதல் ஆகாது.

# இலங்கை தூதுவருக்கு பிரிட்டனில் நெருக்கடி

## வெளியேற்றக் கோரிக்கை

பதில் நடவடிக்கையாக லண்டனில் உள்ள இலங்கைத் தூதரை வெளியேற்றும்படி ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சி எம்.பிக்கள் சிலர் பிரிட்டிஷ் அரசாங்கத்தை வற்புறுத்தி வருகின்றனர் என்று பி.ரி.ஐ. செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதர் டேவிட் கிளாட்ஸ்ரோனை இலங்கை அரசு வெளியேறும்படி உத்தரவிட்டதை பிரிட்டனின் தொழிற் கட்சியும் பலமாகக் கண்டித்துள்ளது.

ஒரு தூதரை ஒரு நாடு வெளியேறும்படி உத்தரவிடுவது மிகவும் பாரதூரமான விஷயமாகும் என்று தொழிற் கட்சி கூறியிருக்கிறது.

விக்டோரியா மகாராணி காலத்தில் பிரிட்டனில் லிபரல் பிரதம மந்திரியாகப் பதவி வகித்த வில்லியம் இவார்ட் கிளாட்ஸ்ரேனின் உறவினர் திரு. டேவிட் கிளாட்ஸ்ரோன் ஆவார். [இ-எ]

## நோயாளர்களுடன் புதனன்று கப்பல் புறப்பாடு

கொழும்புக்கு சிகிச்சை பெற செல்லவுள்ள நோயாளிகளை ஏற்றிச் செல்லும் கப்பல் 12ஆம்திகதி புதன்கிழமை காலை புறப்படவுள்ளது.

பதிவு செய்த சகல நோயாளிகளும், உதவியாளர்களும் அன்றைய தினம் காலை 7-00 மணிக்கு முன் யாழ். போதனா வைத்திய சாலையில் சமுகம் அளிக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

இம்முறை 30 நோயாளிகளும், உதவியாளர்களும், இவர்களுக்குப் பாதுகாப்பாக ஒரு மருத்துவரும், ஒரு தாதி உத்தியோகத்தரும் கப்பலில் செல்லவுள்ளனர். [இ-15]

## இலங்கையர்கள் புதிய குவைத் டினாருக்குரிய பணத்தைப் பெற வாய்ப்பு

கொழும்பு, ஜூன் 9

வர்த்தக வங்கிகளில் பழைய குவைத் டினார்களை ஒப்படைத்தவர்களுக்கு, புதிய குவைத் டினார்களுக்குரிய தொகையை வழங்க மத்திய வங்கி முடிவு செய்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

குவைத்தை ஈராக் ஆக்கிரமித்த திகதியான 2-8-1990க்கு பின்னரும், 16-10-1990க்கு பின்னரும் தாயகம் திரும்பி வர்த்தக வங்கிகளிடம் பழைய குவைத் டினார்களை ஒப்படைத்தவர்களுக்கு மத்திய வங்கி ஏற்கனவே ஒரு குறிப்பிட்ட தொகைப் பணத்தை வழங்கியிருந்தது.

எஞ்சிய பணத்தை வழங்க தற்போது முடிவு செய்துள்ளது. [இ-எ]

## மக்கள் வங்கி மாங்குளம் கிளை

யாழ்ப்பாணம், ஜூன் 9

மக்கள் வங்கியின் மாங்குளம் கிளை தற்காலிகமாக யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகத்தில் இயங்குகிறது. [இ-3]

# 8 பேருக்கு தமிழீழ தேசிய விருது

## யாழ். நகரில் நடக்கும் முத்தமிழ் விழாவில் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், ஜூன் 9

இந்த ஆண்டு எட்டுப்பேர் தமிழீழ தேசிய விருது வழங்கப்பட்டு தமிழீழ விடுதலைப் புலிகளினால் கௌரவிக்கப்பட உள்ளனர்.

யாழ். கோட்டை அருகே புதிதாக அமைக்கப்பட்டு வரும் திறந்தவெளி அரங்கில் நடைபெறும் முத்தமிழ் விழாவில் இந்த விருது வழங்கும் வைபவம் இடம்பெறும்.

தமிழீழ மண்ணினதும், மக்களினதும் மேன்மைக்காக உழைக்கும் மக்களிலிருந்து அவர்கள் ஆற்றிவரும் இலக்கியப்பணி, கலைப்பணி, மக்கள் நற்பணி, போராட்டப் பங்களிப்பு, புதிய கண்டுபிடிப்புகள், தீரச் செயல்கள், அரசியற்பணி, மருத்துவம், விஞ்ஞானம், கல்வி, பத்திரிகைத் துறை போன்ற பல்வேறு துறைகள் சார்பில் ஒவ்வொருவரை ஆண்டு தோறும் தேர்ந்தெடுத்து அவர்களை மாமனிதர்களாக மதித்து அவர்களுக்கு தேசிய விருது வழங்குவதென தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் முடிவு செய்துள்ளது.

இதற்கமையவே எட்டுப் பேர் இந்த ஆண்டு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட இருக்கின்றனர்.

ஆண்டுதோறும் 10 துறைகளுக்கு இதுபோன்ற விருது வழங்கப்படும். ஒரு பவுண் எடை கொண்ட புலிச்சின்னம் பொறிக்கப்பட்ட தங்கப்பதக்கமும், இருபத்தையாயிரம் ரூபா ரொக்கமும் ஒவ்வொரு விருதிலும் அடங்கும். இவ் விருதுகள் ஆண்டுதோறும் விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும், முத்தமிழ் விழாவில் வழங்கப்படும்.

ஒவ்வொரு துறையிலும் தத்தம் அறிவை, ஆற்றலை மக்களுக்காக, மண்ணுக்காக பயன்படுத்தும் உண்மைத் திறமையாளர்களை உலகறியச் செய்யவும், அவர்தம் தொண்டு மேலும் மேலும் சிறக்கச் செய்வதுமே இவ் விருதுகள் வழங்கப்படுவதன் நோக்கமாகும். [இ]

## விருது பெறுவோர் விவரம்

[1] மறைந்த திரு. க. சிவானந்த சுந்தரம்
— மக்கள் பணி,

[2] மறைந்த திரு. ஆ. இராசரத்தினம்
— போராட்டப் பங்களிப்பு,

[3] மறைந்த திரு. பொ. அருணாசலம்
— உயிரை மதிக்காத தீரச்செயல்,

[4] திரு. கலைஞானி
— அரும்பொருள், தொல்பொருள் பாதுகாப்பு,

[5] திரு. நடராசா
— போராட்டப் பங்களிப்பு

[6] காசி ஆனந்தன்
— இலக்கியம்,

[7] திரு. சிவஞானசுந்தரம்
— பத்திரிகை[illegible]

[8] திரு. திருநா[illegible]
— கலை [நாடகம்]

# முத்தமிழ் விழா

## 4ஆம் நாள் நிகழ்ச்சிகள் [09-06-1991]

இடம் சாவகச்சேரி சிவன் கோவில் அருகாமையில் அமைந்துள்ள "மாவீரர் கலை அரங்கம்"

நேரம்: பிற்பகல் 5-30 மணி

### நிகழ்ச்சிகள் விவரம்

**மங்கள இசை:**

நாதஸ்வரம்: திரு என். ஆர். கே. இரத்தினகுமார்
திரு. என். ஆர். கே. வாகீஸ்வரன்

தவில்: திரு. என். முருகானந்தம்
திரு. எஸ் ராமதாஸ்

**விடுதலைப் புலிகளின் திறப்புரை:**

சிறப்புரை: பேராசிரியர் சி. க. சிற்றம்பலம் [வரலாற்றுத்துறை யாழ். பல்கலைக் கழகம்]

**இளைஞர் கவியரங்கு:**

பொருள்: "போகும் வழி வெகு தூரம் இல்லை"
தலைமை: கவிஞர். நாக. சிவசிதம்பரம்
பங்கேற்போர்: ஜெயசீலன், மணலாறு பாஸ்கரன், செந்தமிழ் வீரன், இலட்சுமி கருணாகரன், நாமகள், வினோதினி

**'வாத்ய ப்ருந்தா:**

**இசைக் கச்சேரி:**

திரு எஸ். பாலசிங்கம் — பாட்டு
திரு. வி. கே. குமாரசாமி — வயலின்
திரு எம். சிதம்பரநாதன் — மிருதங்கம்
திரு. ஏ. செல்வரத்தினம் — கடம்

மீசாலை, கலை, பண்பாட்டுக் குழுவினரின்
"தீர்வு" நாட்டிய நாடகம்

இலங்கையர்கோன் - நாட்டுக்கூத்து

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினரின்
போர்க்காலப் பாடல்கள்: மெல்லிசை நிகழ்வு

## போஷாக்கின்மையால் அகதி கர்ப்பிணி பெண் மரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 9

கர்ப்பிணியான அகதிப் பெண் ஒருவர் போதிய சத்துணவு இன்றி, இரத்த சோகை நோய்க்கு உள்ளான நிலையில் மரணமானார்.

கடந்த வியாழக்கிழமை இந்தச் சம்பவம் நடந்தது.

வேலணையில் இருந்து இடம் பெயர்ந்து அரியாலை அகதி முகாமில் தங்கியிருந்த சி. கோகிலாம்பாள் [28 வயது] என்பவரே இறந்தவர் ஆவார்.

இவர் வயிற்றோட்டத்துடன் யாழ். வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

குழந்தையைப் பிரசவித்த பின்னர் மரணம் சம்பவித்தது. [இ-3]

## நியாய விலையில் பொருள்கள்

அச்சுவேலி ஜூன், 9

அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் அரிசி, மா, சீனி, தேங்காயெண்ணெய், சவர்க்காரம் முதலிய பொருள்களை நியாய விலையில் பங்கீட்டு அடிப்படையில் பாவனையாளர்களுக்கு வழங்கி வருகின்றது. [இ-11]

## தமிழுக்கு வாழ்வதே வாழ்வு

தமிழே உனக்கு வணக்கம்
தாயுன் புகழ் இந்த உலகில் மணக்கும்!
தமிழே உனக்கு வணக்கம்

இமை நேரமும் உனை மறக்க மாட்டோம்
எம் கடன் ஆற்றாமல் இறக்க மாட்டோம்
அமுதத் தமிழைத் துறக்க மாட்டோம்
அடிமையை ஒப்பினால் சிறக்க மாட்டோம்
தமிழே உனக்கு வணக்கம்

உனக்கு வந்த நலம் எமக்கு வந்ததாகும்
உனக்கு வந்த வெற்றி எமக்கு வந்ததாகும்
தனக்கென வாழ்ந்தது சாவுக் கொப்பாகும்
தமிழுக்கு வாழ்வதே வாழ்வதாகும்!
தமிழே உனக்கு வணக்கம்

— பாரதிதாசன்.

[முத்தமிழ் விழா சிறப்புக் கவிதை]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூந்திரிகை--
[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
கைப்பற்றினர்.
கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் விபரம் வருமாறு:
★ ரி 81 ரக ஷெல் - 9
★ ரவைக் கூடுகள் - 4
★ ரவை - 480
★ கிளைமர் வெடிக்கனைக் கும் கருவி - 2.
இந்தத் தாக்குதல் சம்பவத்தில் ஆறு சிப்பாய்கள் காயமடைந்ததாக ஸ்ரீலங்கா இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. [உ-3]

மன்னாரில்.
[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
டார்செட்டி வெளியில் தரித்து நின்ற படையினரையும்—
சிலாவத்துறை முகாமில் இருந்து வெளியேறி அகத்தி முறிப்பு சந்தியில் நிலை கொண்டிருந்த படையினரையும்—
மாந்தை முகாமில் இருந்து அடம்பன் பக்கமாக முன்னேற முயன்ற படையினரையுமே புலிகள் தாக்குதல் தொடுத்து முகாமுக்கு திருப்பி அனுப்பினர். [உ-3]

## பொருள் உதவி வழங்கும் போது

# போராளிகளின் இலக்கங்களை குறித்துக்கொள்ளுங்கள்!

யாழ்ப்பாணம், ஜூன் 9
''போராளிகளுக்கு பொருள் உதவிகளை வழங்கும் போது அவர்களின் இலக்கத் தகடுகளை வேண்டிப் பார்த்து, குறித்துக்கொள்ளுங்கள்.''
—இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கோண்டாவிலில் உள்ள யாழ். மாவட்டச் செயலகம் பொது மக்களுக்கு விடுத்த அறிக்கை ஒன்றின் மூலம் கோரியுள்ளது. அந்த அறிக்கையின் விபரம் வருமாறு:-
போராட்ட வளர்ச்சிப் போக்கில் பொது மக்களிடமிருந்து பொருள் உதவிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டிய தேவைகள் எமக்கு ஏற்படுகின்றன.
அதனால் பல சந்தர்ப்பங்களில் எமது போராளிகள் உங்களிடம் பொருள் உதவி கோரி வந்திருக்கிறார்கள்.
ஆனால் இவ்வாறு உங்களிடம் பொருள் உதவி கோரி வருகின்றவர்கள், உண்மையிலேயே எமது இயக்கப் போராளிகள் தானா என்பதை உறுதி செய்ய உங்களால் முடியாமல் போகின்றது. சில சமயங்களில் தங்களைப் போராளிகள் என்று கூறிக்கொண்டு வந்த சில சமூக விரோதிகள் பொதுமக்களிடம் பொருள்களைப் பெற்றுச் சென்றுள்ளார்கள். அவ்வாறான சமூக விரோதச் செயல்களை நாம் கண்டு பிடித்திருக்கிறோம்.
எனவே உங்களிடம் உதவி கோரி வருகின்றவர்கள் உண்மையிலேயே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் தானா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டிய தேவை உங்களுக்கு இருக்கின்றது.
புலிகள் இயக்க உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் இயக்கத்தில் தமக்குரிய இலக்க அடையாளமிட்ட ''இலக்கத்தகடுகளை'' தம்முடன் வைத்திருக்கின்றார்கள்.
எனவே இவர்கள் உங்களிடம் பொருள் உதவி கோரி வரும், சந்தர்ப்பங்களில் நீங்கள் அவர்களிடம் பொருள்களைக் கொடுக்கும்போது அப்போராளிகளுக்குரிய இலக்கத்தகட்டினை பெற்று அந்த இலக்கத்தினைக் குறித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.
இந்நடைமுறையின் மூலம் மக்களை ஏமாற்றிப் பொருள்களைப் பெற்றுக்கொள்ள முயலும் சமூக விரோதிகளை கட்டுப்படுத்துவோம், மேலும் இப்படியானவர்களை இனம் காணும் பட்சத்தில் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும் என்பதையும் தங்களுக்கு அறியத்தருகின்றோம் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கூட்டம்

தனியார் கல்வி நிலைய ஒன்றியச் செயற்பாடு பற்றி கலந்துரையாடுவதற்கும். இவ முக்கிய முடிவுகளை எடுப்பதற்கும் கோட்ட ரீதியாக தெரிவு செய்யப்பட்டிருக்கும் நிர்வாக உறுப்பினர் சகலரும் தவறாது [நாளை] திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலய மண்டபத்தில் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் கல்வி நிர்வாகப்பகுதியினர் வேண்டியுள்ளனர். [உ]

2ஆம் கட்ட..
[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
உள்ளது.
போராட்ட நிகழ்ச்சிகளையும், கலைப்பண்பாடுகளையும் விளக்கும் விதத்தில் இந்திர அலங்கார வளைவுகள் வீதிகள், பிரதான சந்திகளில் அமைக்கப்பட்டுள்ளன. [இ15]

பிரெஞ்சு..
[1ஆம் பக்கத் தொடர்ச்சி]
ஜனாதிபதியிடம் நேற்று முன்தினம் சமர்ப்பித்தது தெரிந்ததே.
இதே வேளை தாண்டிக்குளம் சம்பவம் குறித்து பிரெஞ்சு வைத்தியக்குழுவின் பணிப்பாளர் கவேச்சையாக மேற்கொண்ட விசாரணை பற்றிய அறிக்கை வியாழக்கிழமை ஜனாதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.
பிரெஞ்சு வைத்தியர் குழு, தாண்டிக்குளத்தில் தாக்கப்பட்டதையடுத்து மந்திகை, மன்னார், மடு, கிளிநொச்சி, வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்ட வைத்தியசாலைகளில் கடமை [illegible] கொழும்பில் தங்கியிருந்தனர். அவர்கள் கடந்த வெள்ளி பாரிஸ் பயணமானவர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### சிவஸ்ரீ இ. நாகேந்திரக் குருக்கள்

அராலி வடக்கு நாகேந்திரமடம் ஸ்ரீ நடராஜப் பெருமான் தேவஸ்தான ஆதீனகர்த்தரவும், பிரதம குருவும், முன்னாள் கொழும்பு முகத்துவாரம் ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகர் ஆலய பிரதம குருவும் ஆகிய சிவஸ்ரீ இ நாகேந்திரக் குருக்கள் அவர்கள் 07 - 06 - 1991 இல் சிவபதமடைந்து விட்டார்.
அன்னார் கனகாம்பிகை அம்மாளின் அன்புக் கணவரும், சோமாஸ்கந்த சர்மா, கிரிஜா, முரளிதா சர்மா, சுகலநாதசர்மா, குமுதினி, பிரியதர்ஷினி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சிவஸ்ரீ ப. இரத்தினக் குருக்கள் அவர்களதும் லோசாம்பாளினதும் அன்பு மகனும், காலஞ்சென்ற அன்னபூரணி, நடேஸ்கந்த சர்மா ஆகியோரின் அன்பு சகோதரனும், வத்சலாவின் அன்பு மாமனாரும், முத்துச்சாமிஐயரின் மருமகனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று காலை 8-00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் அராலி மயானத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறோம்.

தகவல்.
நா. சோமாஸ்கந்த சர்மா,
[மகன்]
அராலி வடக்கு,
நாகேந்திரமடம். [4134]

### ஜூட் சதீஸ்குமார்

திருநெல்வேலியைச் சேர்ந்த ஜூட் சதீஸ்குமார் 7 - 6 - 91 மரணமானார். 9 - 6 - 91 ஞாயிறு பிற்பகல் 1 00 மணிக்கு திருநெல்வேலி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ. அருமைநாயகம்
[16984]

### அம்பலவாணர் கணபதிப்பிள்ளை

[உரிமையாளர் கணேசானந்தா சில்க்பலெஸ் யாழ்ப்பாணம்]

நெடுந்தீவு மேற்கைச் சேர்ந்தவரும், யாழ்ப்பாணம் நவீன சந்தை கணேசானந்தா சில்க் பலெஸ் உரிமையாளருமான அம்பலவாணர் கணபதிப்பிள்ளை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற சாரதாம்பாளின் அன்புக் கணவரும், வைத்திலிங்கம், பராசக்தி, நவயோகம் [அதிபர். நெடுந்தீவு பாரதி வித்தியாசாலை] காலஞ்சென்ற பரமேஸ்வரி, தங்கமுத்து [லண்டன்] ஆகியோரின் சகோதரரும், தனிநாயகம், சேதீஸ்வரி [உப தபாலதிபர், நெடுந்தீவு மேற்கு], நரேந்திரன் [பிரதம எழுதுனர் ப.நோ.கூ.ச. நெடுந்தீவு], லோகராஜா [லண்டன்], தாமோதரம்பிள்ளை, பரமானந்தம், அமிர்தலிங்கம் ஆகியோரின் மைத்துனரும், இராஜேஸ்வரன் [கனடா], சோமசுந்தரம் [பிரான்ஸ்] ஆகியோரின் பெரியதந்தையுமாவார்.
அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [9 - 6 - 91] ஞாயிறு பகல் 2 00 மணிக்கு கொக்குவிலில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா. இராமச்சந்திரன்

72/06 பிரம்படி ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். [17095]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 09 - 06 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# விரைவில் அமைதி ஏற்படுத்த அரசு விரும்புகின்றது!

## அமைச்சர் ரணில் கூறுகிறார்

லண்டன், ஜூன் 9
''நாட்டில் விரைவாக சமாதானத்தையும், அமைதியையும் கொண்டுவர அரசு விரும்புகிறது. ஆனால் எந்தவித அரசியல் திட்டம் இந்தப் பிரச்சினைக்கு தீர்வைக் கொண்டு வரும் என்பது இன்னும் தெளிவாக இல்லை''
இப்படிக் கூறுகிறார் அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்கா.
வடக்கு - கிழக்கில் மீண்டும் யுத்தம் ஆரம்பித்து ஒரு வருடம் பூர்த்தியடைவதை யொட்டி வெளிநாட்டு பத்திரிகையாளர் சங்கம் கூட்டிய கருத்தரங்கில் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.
இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலையில் விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்டிருக்கக் கூடும் என்ற சந்தேகம் எழுந்திருப்பது, புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடங்குவதற்கு தடங்கலாக இருக்கக்கூடும் என்றும் அவர் சொன்னார். [உ-3]

# இ. காங்கிரஸ் - ஜனதா தளம் இரகசியப் பேச்சுவார்த்தை!

புதுடில்லி, ஜூன் 9
எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காதவிடத்து, இந்திரா காங்கிரஸும் ஜனதா தளம் கட்சியும் சேர்ந்து கூட்டு அரசு அமைப்பது குறித்து இரகசியப் பேச்சுகள் நடத்தப்பட்டு வருவதாக புதுடில்லி அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.
இது தொடர்பாக முன்னாள் பிரதமர் வி. பி. சிங்குடன் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டு விட்டதாகவும் அச்செய்திகள் தெரிவித்தன. [உ-எ]

# சோனியா காந்திக்கு மீண்டும் அழைப்பு!

சென்னை, ஜூன் 9
இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைமையை ஏற்க முன்வருமாறு திருமதி சோனியா காந்திக்கு மீண்டும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
மத்தியப் பிரதேச முன்னாள் முதலமைச்சரும் மத்திய அமைச்சராக இருந்தவருமான திரு. அர்ஜுன்சிங் இந்த வேண்டுகோளை விடுத்தார்.
ஸ்ரீபெரும்புதூரில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த காங்கிரஸ் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய அவர், ''சோனியா காந்தி காங்கிரஸின் தலைமைப் பதவியை ஏற்கவேண்டும் என்பது நாட்டின் இலட்சக்கணக்கான மக்களின் விருப்பமாகும்.'' என்றும் சொன்னார்.

மானிப்பாயில்-
[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
போர்க்காலப் பாடல்களை ரசிப்பதற்கென திரண்டிருந்த மக்கள் வெள்ளம், நள்ளிரவு வரை உற்சாகத்துடன் அங்கு கூடியிருந்ததைக் காண முடிந்தது.
நேற்றைய விழாவில் விடுதலைப் புலிகள் மன்னார் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. சுரேஷ் கலந்துகொண்டு மங்கள விளக்கேற்றி திறப்புரையாற்றினர்.
விடுதலைப் புலிகள் யாழ்ப்பாண மாவட்ட அரசியல் நிர்வாக துணைப் பொறுப்பாளர் திரு. பாப்பா கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.
திரு. க சொக்கலிங்கம் [சொக்கன்] சிறப்புரையாற்றினார்.
கலை நிகழ்ச்சிகளாக வழக்காடு மன்றம், கூட்டு வீணை இசை, இசைக் கச்சேரி, விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டு கழகத்தினரின் போர்க்கால பாடல்கள் ஆகியன இடம்பெற்றன. [உ-90]

### மூவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 9
மட்டக்களப்பு மாவட்டம் புல்லுமலை கொலனிப் பகுதியில் மூன்று அப்பாவிப் பொதுமக்களைப் படையினர் கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.
பெரிய புல்லுமலை இராணுவ முகாம் படையினர் அந்தப்பகுதியை சுற்றி வளைத்து சோமசுந்தரம் வள்ளியம்மை [15 வயது] அவரது சகோதரி மனோன்மணி [11 வயது] குலசமுத்து [41வயது] ஆகியோரை கைது செய்து முகாம் கொண்டு சென்றனர்.
பின்னர் இவர்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாக தெரிய வந்தது [உ-3]

காரைநகர் -
[1ஆம் பக்கத் தொடர்ச்சி]
அதே போல வெளியில் உள்ள உறவினர்கள் எழுதிய கடிதங்களும் காரைநகரில் சிக்கி உள்ளவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன, [உ-3]

டொனால்ட் கணேசகுமார்
வெற்றிக் கிண்ணம்

50 ஓவர் கிரிக்கெட் போட்டி

சென்றலைட்ஸ் வி. க.

நடத்தும்

மேற்படி போட்டிக்கான விண்ணப்பங்கள் கழக அணிகளிடமிருந்து கோரப்படுகின்றன

விண்ணப்ப முடிவு திகதி: 14-06-91

விண்ணப்பங்களை திரு எஸ். விமலதாசன், 233, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் [ஸ்ரார் டேர்னிங் வேக்ஸ்] என்ற விலாசத்தில் சமர்ப்பிக்கவும்

பிரவேசக் கட்டணம்:- ரூபா 250/-

அணி ஒழுங்குத் தேர்வு 16-06-1991 அன்று மாலை 4 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடக்கும்.

[16985] சென்றலைட்ஸ் வி. க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org